From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 4/2014

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரசேகரன் | Father/Husband Name | : அய்யாவு |
| Age | : | Calling | : |
| Date | : 22.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 22 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது அழகர்கோவிலில், ஆயுத்தம்பட்டி கிராமம் ஐஸ்வர்யாநகரில குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு மேலூர் கஸ்தூரிபாய் நகரில் குடியிருந்து வந்தேன். சாட்சிகள் தனுஸ்கோடி, அய்யன்கோவில், தமிழ்செல்வம், களஞ்சியம் ஆகியோர்களை தெரியும், ஆஜர் எதிரி மற்றும் இவ்வழக்கின் மற்றொரு எதிரியையும் தெரியும். 2013ம் வருடம் நான் கஸ்தூரிபாய் நகரில் குடியிருந்தபோது சபாபதி தாயாருக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. அதனால் சாட்சி தனுஸ்கோடி, ஆஜர் எதிரி ரத்தினசபாபதிக்கும் கொடுக்கல், வாங்கல் ஏற்பட்டது. அதனால் சாட்சி தனுஸ்கோடி, ரத்தினசபாபதியிடம் 14,1/2 பவுன் நகையை கொடுத்தார். பின்னர் அதில் 4 பவுன் நகையை சபாபதி, தனுஸ்கோடியிடம் திரும்ப கொடுத்துவிட்டார், மீதமுள்ள நகை தும்பைபட்டியை சேர்ந்த வெங்கடேஷ்வரியிடம் இருப்பதாக ரத்தினசபாபதியும், தனுஸ்கோடியும் என்னிடம் சொன்னார்கள். 2ம் எதிரி வெங்கடேஷ்வரி அந்த நகையை மேலூர் முத்தூட் பைனான்ஸ்ல் வைத்திருப்பதாக ரத்தினசபாபதியும், தனுஸ்கோடியும் என்னிடம் சொன்னார்கள். அதன் பின்னர் எதிரிகளுடன் தனுஸ்கோடி மேலூர்

முத்தூட் பைனான்ஸ்க்கு நகையை திருப்ப சென்றார்கள், அப்போது எதிரி வெங்கடேஷ்வரி அதற்கு முன்தினமே நகையை திருப்பிவிட்டு எடுத்து சென்றதாக என்னிடம் எதிரி ரத்தினசபாபதியும், தனுஸ்கோடியும் என்னிடம் சொன்னார்கள். அதன்பின்னர் தனுஸ்கோடி எதிரிகள் மீது கீழவளவு காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

1ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

இல்லை.

2ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

மேற்கூறிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, நான் அருகில் இருந்ததால் எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும். 1ம் எதிரி ரத்தினசபாபதியின் தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால்தான் அசா1னிடம் பணம் கேட்டார் என்றால் சரிதான். 1ம் எதிரி, அசா1னிடம் பணம் கேட்டபோது 2ம் எதிரி அங்கு இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரி நகைகளை 2ம் எதிரி மூலம் நகை அடகு வைப்பதாக அசா1 தனுஸ்கோடியிடம் சொன்னாரா என்றால் எனக்கு 1ம் எதிரி மற்றும் அசா1 தனுஸ்கோடி சொல்லிதான் அனைத்து விவரங்களும் தெரியும், வேறு எதுவும் தெரியாது. 1ம் எதிரி தனுஸ்கோடியிடம் சொல்லிதான் 2ம் எதிரியிடம் நகை இருக்கும் விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான். 1ம் எதிரி மற்றும் தனுஸ்கோடி முத்தூட் பைனான்ஸ்ற்கு சென்று நகையை கேட்ட விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் கேட்காததால் சொல்லவில்லை, நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில்

சொன்னதுபோல் 1ம் எதிரியிடம் நகையை கேட்டபோது, 2ம் எதிரியிடம் இருப்பதாக சொன்னதால், 2ம் எதிரியிடம் சென்று தனுஸ்கோடி கேட்டபோது தரமுடியாது என்று சொன்னதால், 1ம் எதிரியிடமிருந்து நகையை பெற்றுதருமாறு தனுஸ்கோடியை புகார் கொடுக்க நான் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அசா1 தனுஸ்கோடி எனது நண்பர் என்பதனால் அவருக்கு ஆதவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.